# சென்னை சங்கீத வித்வத் சபையின் 66-வது மகாநாட்டில் வீணை வித்வான் தஞ்சாவூர் கே.பி. சிவானந்தம் அவர்களின் தலைமை உரை

**சங்கீத** வித்வத் சபையின் 66-வது மகாநாட்டைத் துவக்கி வைத்த மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய தமிழ்நாடு ஆளுநர் அவர்களுக்கு என் நமஸ்காரத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பண்பு நிறைந்த சங்கீத வித்வத்சபைத் தலைவர் அவர்களே, போற்றுதலுக்குரிய இச்சபையின் இதர நிர்வாகிகள் அவர்களே, இசை வல்லுநர் குழு உறுப்பினர்களே, இச் சபையின் சிறந்த செயல் பாட்டிற்குப் பெரிதும் துணை புரிந்து வரும் செயலாளர்களே, என் **அன்பிற்கும்** பெரு மதிப்பிற்கும் உரிய சங்கீத கலாநிதிகளே, சங்கீத வித்வான்கள் - விதுஷிகளே, கர்நாடக சங்கீதத்திற்கு முழு ஆதரவு தந்து வரும் ரசிகப் பெருமக்களே உங்கள் அனைவருக்கும் எனது நமஸ்காரத்தைப் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

வித்வத் சபையின் 66-வது ஆண்டு விழாவிற்குத் தலைமை தாங்கி **நடத்திக்** கொடுக்கும் பொறுப்பு இச்சிறியேனுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. எனக்கு முன் பெரிய மகாவித்வான்கள் பலர் இருந்து நடத்தித் தந்துள்ள இத்தகைய பெரிய பொறுப்பை என் மீது **சுமத்தி** இருக்கும் இச்சபையின் நிர்வாகத்தினர் அனைவருக்கும் மீண்டும் என் நமஸ்காரத்தைப் பணிவன்புடன் **தெரிவித்**துக் கொள்கிறேன். இத்துடன், எனது தாய், தந்தையரையும், சங்கீத உலகிற்குத் தம்மால் இயன்ற சேவை புரிந்த என் முன்னோர்களையும், இக்கலையை எனக்குக் கற்றுத்தந்த என் குரு நாதர்களாகிய வித்வான்கள் தேசமங்கலம் சுப்பிரமணிய ஐயர், கோமதி சங்கரய்யர், பந்தணைநல்லூர் மீனாட்சி சுந்தரம் பிள்ளை ஆகிய மூவரையும் மிகப் பணிவுடன் இத்தருணத்தில் வணங்குகிறேன்.

இப்பிறவியில் எனக்கு இத்தகையதொரு வாய்ப்பை நல்கிய எங்கள் குலதெய்வமான தஞ்சை பிருஹதீஸ்வரர்-பிருஹந்நாயகி திருவருளை எண்ணி, அவர் தம் பாதங்களை என் மனத்தால் தியானித்து **பூஜித்து**, இப்பெரிய பொறுப்பினை ஏற்றுக்கொள்கிறேன். எனக்கு **அளித்த** இந்த வாய்ப்பினை எங்கள் முன்னோர்களான-தஞ்சை சின்னையா, பொன்னையா, சிவானந்தம், வடிவேலு-அவர்களுக்கும், அவர்களின் குருவுமான **ஸ்ரீ** முத்துஸ்வாமி தீக்ஷிதர் அவர்**களுக்குமே அளித்த** பெருமையாகக் கருதுகிறேன். **சங்கீத** உலகில் இப்பெரியோர்கள் செய்துள்ள பெரும் சேவையையும், அச்சேவைகளை நானறிந்த அளவில் செய்திட்ட நிலையையும் பாராட்டியே இப்பெருமை எனக்கு **அளிக்கப்** பட்டதாகக் கருதுகிறன். நீங்கள் தரும் பாராட்டுக்களையும் பெருமைகளையும் அவர்களின் பாத மலர்களில் சமர்ப்பணம் செய்கிறேன்.

இந்த **சங்கீத வித்வத்** சபை மகாநாட்டை என் தந்தை சங்கீத கலாநிதி, க.பொன்னையா பிள்ளை அவர்கள் 1933-ம் **ஆண்டு** தலைமை தாங்கி நடத்தித் தந்தார். அவருடைய பெரும் சேவையை மதித்தும், எங்கள் முன்னோர்களின் சேவையைப் பாராட்டியும், **இச்சபை** என் தந்தையாருக்கு ஓர் அரிய வாய்ப்பினைத் தந்த 59 ஆண்டுகள் பின்னர், அவரது மகனாகிய எனக்கு இவ்வாய்ப்புக் **கிடைத்ததை** எண்ணி பெரிதும் மகிழ்ச்சி அடைவதோடு, இவ்வாய்ப்பினைத் தந்த எல்லோருக்கும் எங்கள் குடும்பத்தாரின் சார்பில் மீண்டும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இசைக் கலையை இறைவன் பார்வதிக்கு **உபதேசித்ததன்** மூலமாக மானிடர்க்கு வழங்கினார். இறைவன் நாத வடிவமாகத் திகழ்கின்றார். ஏழிசையாய் இசைப்பயனாய் இறைவன் விளங்குகிறான் என்று தேவார ஆசிரியர்களும் **கூறி**யுள்ளனர். கலை வடிவமாக இறைவனும், இறைவனின் அருள் வெளிப்படையாகக் கலைகளும் விளங்குகின்றன. அக்கலைகளுள், இசைக் கலையும் ஒன்று. சங்கீதம் 'சாமவேத'த்திலிருந்து தோன்றியது. இசைக்கு இசையாதார் யாருமில்லை. காட்டில் வாழும் கொடிய விலங்குகள் கூட இசைக்குக் கட்டுப்பட்டதை இலக்கியங்கள் கூறுகின்றன.

நாரதரால் இயற்றப்பட்ட 'நாரத சிக்ஷை' என்ற நூலும், பரதரின் 'நாட்டிய சாஸ்திர'மும், தத்திலரின் 'தத்திலம்' என்ற நூலும், மதங்கரின் 'பிருஹத்தேஸி' யும், பார்ச்வ தேவரின் 'சங்கீத சமயசாரமும்', சார்ங்க தேவரின் 'சங்கீத ரத்னாகர'மும், தாமோதரரின் 'சங்கீத தர்பண'மும், புண்டரீக விட்டலரின் '**ஷட்ராக** சந்திரோதயமும்', சோமநாதரின் 'ராக விபோத'மும், அஹோபிலரின் 'சங்கீத பாரிஜாத' மும், ராம அமாத்தியரின் 'ஸ்வரமேளகலாநிதி' யும் ரகுநாத நாயக்கரின் மந்திரி, கோவிந்த தீக்ஷிதரின் 'சங்கீத ஸுதா'வும், வேங்கடமகியின் 'சதுர்தண்டிப்ரகாசிகை'யும் கோவிந்தசாரியாரின்' 'ஸங்கிரஹ சூடாமணி'யும் துளஜா மகாராஜாவின் 'சங்கீத சாராம்ருத'மும் நமது சங்கீத பாரம்பரியத்தை வெளிப்**படுத்**தும் ஒப்பற்ற நூல்களாக விளங்கி வருகின்றன

நமது நாட்டில் வழங்கி வரும் சங்கீதத்தைக் 'கர்நாடக சங்கீதம்' என்று கூறுகிறோம். கர்நாடக சங்கீதத்தில் ராகங்களுக்கு முக்கியமான இடமுண்டு. இந்த ராகங்களை நமது முன்னோர்கள் 'மார்க்கம்' என்றும் தேசீ' என்றும் பாகுபடுத்தினர். ராகம் பாடும் பொழுது தான் வித்வானின் மனோதர்மம் பிரகா சிக்கிறது. பாடுவோரின் **ஆ**ற்றலால் ராகங்கள் மேன்மேலும் மெருகேற்றப்பட்டு, அது **அடுத்த** தலை முறையினருக்குக் குருகுல வாசம் மூலம் முறையாகக் கற்பிக்கப்படுகிறது. இந்த ராகங்கள் வெகுவாகக் கையாளப்பட்டு, மக்களுக்குப் புரியுமாறு வளர்ச்சி பெற்றிருப்பதால், அவற்றை எவ்வளவு பாடினாலும், பாடுவோர்க்கும், கேட்போருக்கும் திகட்டாமல் இனிக்கின்றன. ஒரே கீர்த்தனையை எத்தனை முறை பாடினாலும், ஒவ்வொரு முறையிலும் ஒரு புதிய அனுபவம் கிடைக்கிறது. **சங்கீத** சமுத்திர**த்தி**ல் நாம் கொஞ்சம் தான் முகந்து கொண்டு வந்துள்ளோம் என்றும் நமக்குப் புரியாத ஒரு பெரிய **சங்கீத** உலகம் **இருக்கிறது** என்றும் உணர்கின்றோம்.

லயமும், சுரமும் சேர்ந்து நம்மை புதியதொரு உலகிற்கே அழைத்துச் செல்வதை அறிகிறோம். நாதத்தின் நுணுக்கங்களையும், ரஞ்சனம் உண்டாக்கும் வழிமுறைகளையும், ரச பாவங்களை ராகத்தில் **அமைக்கும்** நெறிகளையும், ரச பாவத்தோடு பாடும் ராகச் சாயல்களையும், ஒழுக்கமான முறையில் ராகங்களை அமைக்கும் முறைகளையும், கிருதிகளை லயக்கட்டுக் கோப்புடன் பாடும் முறைகளையும், நம் முன்னோர்கள் வகுத்துள்ளனர். இந்த ராகங்கள் சரியான முறையில் ஒழுங்கு படுத்தப்பட்டு, அமைக்கப்பட்டுள்ள காரணத்தால் இவை, தலை-முறை, தலைமுறைகளாக வாழ்ந்து வருகின்றன. நமது சங்கீதத்தில் காணும் ராக-தாள அமைப்புக்களைக் கண்டு அயல் நாட்டவரும் வியக்கின்றனர். இப்படிச் சிறப்படைந்திருக்கும் ராகங்களில் குறிப்பாக - தோடி, பைரவி, காம்போதி, கல்யாணி, சங்கராபரணம் போன்றவை இன்றும் நம் வித்வான்கள் அமைப்பு நிலை குறையாமல் பாடி வருவதைக் காண்கின்றோம். இவர்கள் ஒவ்வொருவரும் தங்களுக்கே உரித்தான பாணியில் பாடி வருகின்றனர். இதில் யாருடைய பாணி உயர்ந்தது என்ற சர்ச்சை தேவையில்லை. அவரவர் சாரீரத்தில் பேசுகிற இயற்கையான மனோதர்மப்படி ஒவ்வொரு பாணியும் விளங்குகிறது.

இலக்கிய நிலையில் இசைக்கலையை வெளிப்படுத்தும் இசை வடிவங்களை **'உருப்படிகள்'** என்று கூறுவர். தேவார **ஆசிரி**யர்களான திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடிய அற்புதமான இசைப் பாடல்களைக் கண்டு உலகமே வியக்கிறது. இப்பாடல்களைக் கோவில் தோறும் பாட ஏற்பாடு செய்த **தஞ்சை** அரசர் ராஜராஜனையும், இவற்றை வெளிக் கொணரப்பாடுபட்ட நம்பியாண்டார் நம்பி அவர்களையும், சங்கீத உலகம் என்றென்றும் நினைவு கூரும். ஜயதேவர், தாள்ளப்பாக்கம் அன்னமாசாரியர் புரந்தர தாஸர், அருணகிரிநாதர், நாராயண தீர்த்தர், க்ஷேத்ரக்ஞர், பத்ராசலம் ராமதாஸர், முத்துத்தாண்டவர், மாரிமுத்தாப்பிள்ளை, அருணாசலக் கவிராயர், சியாமா சாஸ்திரி, தியாகராஜர், முத்துஸ்வாமி தீக்ஷிதர், கோபாலகிருஷ்ண பாரதி, ஸ்வாதித் திருநாள், சுப்பராய சாஸ்திரி, வீணை குப்பையர், மைசூர் ஸதாசிவராவ், பல்லவி சேஷய்யர், எம் முன்னோர்களான சின்னையா, பொன்னையா, சிவானந்தம், வடிவேலு போன்றவர்கள், அந்தந்தக்காலங்களுக்கு ஏற்ற வகையில் உருப்படிகள் பலவற்றைப் படைத்து கர்நாடக **இசை** உலகிற்கு வளம் தேடித் தந்துள்ளார்.

பக்தியால் சங்கீதம் தோன்றியது, சங்கீதத்தால் பக்தி மேன்மேலும் வளர்கிறது. **சங்கீத,** பரதக் கலைகளைப் பயில இறைவன் அருள் தேவை. நாத ரூபமான இறைவனை நாதோபாசனையால் பூஜிக்கும் முறையை நம் முன்னோர்கள் வகுத்துள்ளனர். சங்கீதம் நமது மனத்தை பரிசுத்தப்படுகிறது. ஒருமைப் படுத்துகிறது. மனம் ஒருமைப்படுவதின் மூலம், நாம் நம் ஆன்மாவை உணர்கிறோம். ஆன்மாவிற்குள் ஜோதி ரூபமாக விளங்கும் ஆண்டவனையும் உணர்கிறோம். ஆண்டவனின் திருவருளில் நம்மை நாம் ஒன்று படுத்திக் கொள்கிறோம். இதனைப் பெரியவர்களின் வரலாறுகள் மூலம் நாம் அறிகிறோம். **இக்கலைகளைப்** பண்டைக்காலத்திலிருந்தே பெரும்பாலும் அரசர்களும், கோவில்களும் தான் வளர்த்தும், காப்பாற்றியும் வந்துள்ளனர்.

இந்த சங்கீத மரபை பரம ஞானம் படைத்த குரு உபதேசத்தால்தான் பெறமுடியும். குருகுல வாசத்தின் மூலம் தான் இந்தக் கலையை முழுமையாகக் கற்க முடியும். எம் முன்னோர்களான தஞ்சை நால்வருக்கும் ஸ்ரீ முத்து ஸ்வாமி தீக்ஷிதர் அவர்களே குருவாக அமைந்தது, எங்கள் பரம்பரை செய்த புண்ணியமே. எம் முன்னோர்கள் " நவரத்ன மாலா" என்ற ஒன்பது கீர்த்தனைகளையும், அவற்றில் தங்கள் குருநாதரைப் போலவே 'குருகுஹ' என்ற முத்திரையுடன் ஸ்வாமியையும், அம்பாளையும் தொடர்பு படுத்தியும் குருகுஹதாஸர், குருகுஹபக்த என்று துதித்தும் பாடியும் உள்ளனர்.

இக்கலையைப் புத்தகங்களை மட்டுமே நம்பிக் கற்க முடியாது. குருகுல வாசத்தின் போது குருவுடன் இருந்து, குருவின் மனோ தர்மத்திற்கு ஏற்றவாறு கற்கவேண்டும். குருவுடன் தங்கியிருக்கையில், சங்கீதத்தைக் கற்றுக் கொள்வதோடு, வாழ்க்கை நெறிகளையும் கற்றுக்கொள்ள வாய்ப்பு ஏற்படுகிறது. சங்கீதம் என்பது பேச்சிலும், எழுத்திலும் மட்டும் அடங்குவதல்ல. தற்சமயம் சங்கீத உலகில் பிரமலமடைந்துள்ள வித்வான்கள், குருகுல முறையில் சங்கீதத்தைக் கற்றவர்களே. சங்கீத லக்ஷணத்திற்குத் துளிக்கூட 'பங்கம்' இல்லாமல் தன்னுடைய சாரீர தர்மத்திற்கு உதவுமாறு லலிதமான பாணியை அமைத்துக் கொண்டு பாடுவதுதான் சரியான மார்க்கமாகும்.

பட்டப்படிப்பிற்குப் பள்ளியில் 12 வருடங்களும், கல்லூரியில் மூன்று வருடங்களும் படித்த பின்பு தான் பட்டதாரியாக முடிகிறது. அதைப்போலவே, சங்கீதக்கலையைப் பயில குறைந்தது 10 வருடங்களாவது ஒரே குருவினிடத்தில் பயின்று, மேலும் சில வருடங்களாவது வித்வான்களின் கச்சேரிகளை இடைவிடாமல் கேட்டு, அவற்றிலுள்ள சிறந்த அம்சங்களைத் தனதாக்கிக் கொள்ள முடியும். பயிற்சிக் காலங்களில் அதிகாலையில் தினமும் இரண்டு மணி நேரமாவது அப்யாசம் செய்ய வேண்டியது மிகவும் முக்கியம்.

தற்காலத்தில் பல்வேறு கல்வி நிறுவனங்களின் மூலம் சங்கீதம் கற்பிக்கப்படுகிறது. இப்படிப்பட்ட பயிற்சியில் முழுமை இல்லை. சங்கீத நிறைவு பெறாமலேயே, சங்கீதப் பயிற்சி பெற்று வெளியேறுகிறார்கள். சங்கீத கல்வி நிறுவனங்களில் சங்கீத ஆசிரியர் நியமன விஷயத்தில் சட்ட திட்டங்களை மட்டும் திட்ட வட்டமாக செயல்படுத்துகின்றனர். சங்கீதம், சட்ட திட்டங்களுக்கு மட்டுமே உட்பட்டதல்ல. சங்கீதத் தகுதி வாய்ந்த, வயது முதிர்ந்த வித்வான்களை ஆசிரியர்களாக அமர்த்தி, கல்லூரியை நடத்தினால் தான், கலை முழுமையாக வளர்ச்சியடைய முடியும். அந்த நிறுவனங்களும் பெருமையடையும். அரசு நிறுவனங்களும், தனியார் ஸ்தாபனங்களும் இதை உறுதியாகச் செயல்படுத்தினால்தான் பிற்காலத்தில் பற்பல வித்வான்கள் தோன்ற வாய்ப்பு ஏற்படும் என்பது சங்கீதத் துறையில் எனது 50 ஆண்டு கால அனுபவத்தின் மேல் கண்ட உண்மை என்பதையும் இந்த சந்தர்ப்பத்தில் பணிவுடன் விக்ஞாபித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நானும் ஒரு சிறிய அளவிற்கு 'வீணை' பயின்று வாசித்து வருகிறேன். இந்த உயர்மிகு வாத்தியத்தின் பெருமையையும், வாசிக்கும் முறைகளையும், இந்த வித்வத் சபையில் 1979-ல் நடந்த மகாநாட்டிற்கு தலைமை தாங்கி 'சங்கீத கலாநிதி' விருது பெற்ற என் சகோதரர் வீணை வித்வான் கே.எஸ்.நாராயண ஸ்வாமி ஐயர் அவர்கள் வெகு அழகாகத் தமது தலைமை உரையில் எடுத்துக் கூறியுள்ளார். இருப்பினும் என் முறையிலும் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

தெய்வீக வாத்யமான வீணையின் உயர்வைப் பற்றி வேதங்கள் கோஷிப்பதாக வேத அத்யயனம் செய்த மகா பண்டிதர்கள் கூறக்கேட்டிருக்கிறேன். வீணை முதலில் எந்த உருவிலிருந்தது, இப்பொழுது அமைந்திருக்கும் உரு எக்காலத்தில் யாரால் அமைக்கப்பெற்றது என்பவையெல்லாம் ஆராய்ச்சிக்குரிய விஷயங்கள். இன்று கையாளும் வீணையின் அமைப்பை நாம் அறிகிறோம். இதன் தெய்வீகமான நாதத்தையும் அனுபவித்து மகிழ்கிறோம்.

முதன் முதலில் வீணையை அப்யாஸம் பண்ணும்போதே, நமது கர்நாடக சங்கீத முறையில் அமைந்துள்ள ரக்தி ராகங்களின் ஸ்வரூபமும், பாவமும், வீணையில் அமைந்துள்ள 12 ஸ்வரஸ்தான மெட்டுக்களிலிருந்து மட்டுமே த்வனிக்காது என்ற உண்மையை இந்த வாத்தியம் நிரூபித்துக் காட்டுகின்றது. ஒவ்வொரு ராகமும் பாவ பூர்த்தியுடன் த்வனிப்பதற்கு, ஸ்வரங்களை ஏற்றத் தாழ்வுடனும், வளைவு குழைவுகளுடனும், எந்த அளவில் வாசிக்கவேண்டும் என்பதை இந்த வாத்யமே அதை முறையாக ஆராதிப்பவர்களுக்குச் சிறந்த குரு நாதரைப் போல் போதிக்கின்றது.

'கீதானுகதம் வாத்யம்' என்ற முறை தான் நமது ஸங்கீத பத்ததியில் கையாளப்பட்டு வருகின்றது. வைணிகர்களையும், பாடகர்களையும் புகழும்போது வீணைக்கு உவமையாகப் பாட்டையும், பாட்டிற்கு உவமையாக வீணையையும் காட்டிப் புகழ்வதுண்டு. பாட்டும் வீணையும் ஒன்றிற்கு ஒன்று துணையாகவே அமைந்துள்ளன. பாடகர்கள் வீணையை ஓரளவு அப்யாஸம் செய்யவேண்டுமென்பதை ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதர் அவர்களும் அவருடைய முன்னோர்களும் நிரூபித்திருக்கிறார்கள்.

ஸங்கீதம் இனிமையையும் ஸௌக்யத்தையும் அடிப்படையாகக் கொண்டது வீணை இவற்றின் சிகரம். லோகமாதாவான அம்பாளுக்குப் பூஜை செய்து, புஷ்பங்களால் அர்ச்சனை செய்யும்போது பக்தி ச்ரத்தையுடன் புஷ்பங்களை மிருதுவாக ஸமர்ப்பிக்கின்றோம். ஸங்கீத தேவதையை ஆராதிக்கும்போது (அதிலும் வீணை வழி) ஸ்வர புஷ்பங்களை மிருதுவாகக் கையாண்டு ஸமர்ப்பணம் செய்வது உத்தமமான முறை.

தானம் என்பது முக்கியமான அம்சமாகும். பாடுபவர்களும், வீணை வாசிப்பவர்களும், நல்ல முறையில் தானம் அப்யாஸம் செய்வது, கற்பனையாக ராகம் பாடுவதற்கும் நிரவல் மத்யமகாலம் பாடுவதற்கும் மிகவும் பயன் தருவதாகும். வீணையில் தானம் வாசிக்கும்போது தாளத்தந்திகளை உபயோகப்படுத்த வேண்டிய முறையை, வியக்கத்தக்க ரீதியில் நமது முன்னோர்கள்

வகுத்துள்ளார்கள். தான ஸம்பிராயத்தில், வீணையில் மீட்டுவிழாமல் ஒலிக்கும் ஸ்வரங்களில் தாளத்தந்திகள் மிருதுவாக ஒலிக்க வேண்டும். மீட்டுவிழாத ஸ்வரங்கள் தாளத்தந்திகளின் த்வனியில் முழுகி மறைந்து விடக்கூடாது. அந்த ஸ்வரங்களை போஷிப்பது போல தாளத் தந்திகளை மிருதுவாக உபயோகப்படுத்த வேண்டும். ராகபாவத்துடன் லக்ஷணத்திற்குக் கட்டுப்பட்டு ஸ்வரத்தொகுதிகளை தான வரிசைக் கிரமத்தில் அமைத்து காலப்ரமாண சுத்தத்துடன் தானம் வாசிப்பதுதான் சிறந்த முறை.

பண்டைய காலத்தில் ராகாலாபனை, கிருதி, நிரவல், தானம், பல்லவி நிரவல் இவை தான் பிரதானமாகப் பழக்கத்திலிருந்தன என்று என் தந்தையார் காலத்திலிருந்த மற்ற வித்வான்களும் கூறுவார்கள்.

மத்யமகால ஸ்வரம் பாடுவதற்கு ஒவ்வொரு ஸ்வரஸ்தானத்திற்கும் எழுத்தைச் சொல்லியாக வேண்டியிருப்பதால், ராக பாவத்திற்கும் ரக்திக்கும் அடிப் படையான வளைவு குழைவுகளுக்கு இடமில்லாமல் போய்விடுகிறது. இதனால் தான் ராகாலாபனை செய்யும்போது ஏற்படும் ரக்தியும் ஸுகபாவமும் மத்யமகால ஸ்வரம் பாடும்போது ஏற்படுவதில்லை. சௌககால ஸ்வரத்தை ஓரளவு போஷிக்கச் செய்துவிடலாம். ஜதிகளை ஸ்வரங்களாக அமைத்துப் பாடும்போது ராகரக்தியும் ஸஞ்சாரக்ரமங்களும் பாதிக்கப்படுகின்றன. விவஹாரம் என்ற பெயரில் ஸ்வரங்களை அடித்துக் கையாளும் போது, அவை ஸ்தானங்களிலிருந்து விலகி, ஸ்வரத்திற்கும் ஸ்தானத்திற்கும் சம்பந்தமில்லாத நிலை ஏற்பட்டு விடுகிறது. ராகபாவமும் ரக்தியும் கெடாமல் ஸ்வரம் பாடும் முறையைக் கையாள்வது தான் உசிதம் என்பது என் அபிப்பிராயம்.

வித்வத் சபையின் நிபுணர் குழுவின் அங்கத்தினர்கள், அதிகாரிகள், ரசிகப்பெருமக்கள், எனது சகோதார வித்வான்கள் ஆகியோர் இந்த மாநாட்டிற்குத் தலைமை தாங்கும் பணியில் என்னுடன் முற்றிலும் ஒத்துழைத்து, என்னை ஆதரிப்பார்கள் என்ற திடமான நம்பிக்கையுடன் தான் நான் இந்த மாபெரும் பொறுப்பை ஏற்றுக்கொண்டேன். ஆகவே, நாளை முதல் நடக்கவிருக்கும் காலை நிகழ்ச்சிகளில் எனக்கு அவர்கள் பூர்ணமான ஒத்துழைப்பை நல்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அனைவருக்கும் வணக்கம். நன்றி.

* * *